# செம்பாக்கம் பேரூராட்சி
# காஞ்சிபுரம் மாவட்டம்
# சென்னை–600073

ந.க.எண்.250/2010 நாள் 2/6/2010

## 1998ம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் தமிழ்நாடு சட்டம் 43/1998–ன் கீழ் அறிவிக்கப்படும்

# ஒப்பந்தப்புள்ளி அறிக்கை

செம்பாக்கம் பேரூராட்சிக்காகவும், அதன் சார்பாகவும் பேரூராட்சியின் அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டம் 2010–2011 கீழ் மேற்கொள்ள கீழ்காணும் விவரத்தில் கண்டுள்ள பணிகள் செய்ய ஒப்பந்தப்புள்ளிகள் 2010–ம் ஆண்டு ஜுன் மாதம் 24–ம் தேதி வியாழகிழமை பிற்பகல் 3.30 மணி வரை நேரிலோ அல்லது அஞ்சல் மூலமோ பேரூராட்சியின் செயல் அலுவலர் அவர்களால் பெற்றுக்கொள்ளப்படும். பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் அனைத்தும் அன்று பிற்பகல் 4.00 மணியளவில் வருகை தந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் ஒப்பந்தப்புள்ளி உறைகள் திறக்கப்படும். பணி சம்பந்தமான ஒப்பந்தப்புள்ளி படிவங்களை இப்பேரூராட்சி அலுவலகத்தில் 23.6.2010 அன்று மாலை 4.00 மணி வரை உரிய தொகை செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். முன் வைப்புத் தொகையை 23.6.2010 அன்று மாலை 4.00 மணிக்குள் செலுத்தி உரிய சலான் பெற்று ஒப்பந்தப்புள்ளிக்கான வினாப்படிவத்துடன் இணைக்கப்பட வேண்டும்.

அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டம் 2010–2011

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. | டேவணித் தொகை ரூ. | படிவத் தொகை ரூ. | பணி முடிக்கும் காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | சிட்லபாக்கம் மெயின் ரோடு மற்றும் முக்கிய பிரதான சாலைகளில் LED விளக்குகள் அமைத்தல் | 1000000 | 10000 | 8200 | 30 நாட்கள் |
| 2 | சரஸ்வதி நகர் பூங்கா மேம்பாடு செய்தல் | 1400000 | 14000 | 8200 | 120 நாட்கள் |
| 3 | ஆலவட்டம்மன் கோயில் தெரு குளம் மேம்பாடு பணி | 1250000 | 12500 | 8200 | 90 நாட்கள் |
| 4 | சோடியம் ஆவி விளக்கு (250W) அமைத்தல் பணி | 500000 | 5000 | 3100 | 30 நாட்கள் |
| 5 | மாருதி நகரில் வணிக வளாகம் தரை தளம் கட்டுதல் | 1500000 | 15000 | 8200 | 180 நாட்கள் |
| 6 | டெல்லஸ் அவென்யு கிணறு வெட்டுதல் பணி | 715000 | 7150 | 3100 | 90 நாட்கள் |
| 7 | ஆழ்துளை கிணறு 10 எண்ணிக்கை அமைத்தல் பணி | 610000 | 6100 | 3100 | 30 நாட்கள் |

## நிபந்தனைகள்

1. தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 43/1998 மற்றும் விதிகள் 2000–ம் படி ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலிக்கப்படும்.
2. ஒப்பந்ததாரர்கள் ஒரு வேலைக்கு தனித்தனியே இரண்டு, மூடி முத்திரையிடப்பட்ட உறைகள் சமர்பிக்கப்பட வேண்டும். ஒரு உறையில் பிணை வைப்புத் தொகை செலுத்தியமைக்கான ரசீது மற்றும் ஒப்பந்தப்புள்ளியினை மேற்கொள்வதற்குரிய தகுதியினை தெரிவிக்கும் விவரங்கள் அடங்கிய படிவம் பூர்த்தி செய்து கொடுக்கப்பட வேண்டும். யாதொரு உறையில் ஒப்பந்தப்புள்ளிக்கான விலைப்புள்ளிகள் அடங்கிய (Schedule Rate) படிவத்தில் விலைப்புள்ளிகள் குறித்து அனுப்பப்பட வேண்டும்.
3. ஒப்பந்தப்புள்ளிகள் அளிப்பதற்கான முன் தகுதியினை தெரிவிக்கும் தகவல் குறித்த உறைகள் பரிசீலிக்கப்பட்டு ஒப்பந்தத்தை நிறைவேற்றக் கூடிய தகுதி உடையவர் என கண்டறியப்பட்டால் மட்டுமே ஒப்பந்தப்புள்ளிகளுக்கான உறை பிரிக்கப்படும்.
4. ஒப்பந்தப்புள்ளி தகுதி அடிப்படையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட உடன் பேரூராட்சி அலுவலகத்தில் வழங்கப்படும் மாதிரி படிவத்தில் ரூ.20/– மதிப்புள்ள அரசு முத்திரைத்தாளில் ஒப்பந்தம் செய்து தருவதுடன் மேற்படி வேலைக்கான மதிப்பீட்டின் படி விழுக்காடு வைப்புத் தொகை செலுத்தப்பட வேண்டும்.
5. இப்பேரூராட்சியில் பதிவுப் பெற்ற ஒப்பந்தகாரர்கள் அன்றி பிற ஒப்பந்ததாரர் மேற்படி வேலைக்கான ஒப்பந்தப்புள்ளி அளிக்க உத்தேசிக்கும் பட்சத்தில் இப்பேரூராட்சியின் விதிமுறைகளுக்குட்பட்டு அசல் செல்வ நிலை சான்றுடன் அதற்கான கட்டணம் செலுத்தி ஒப்பந்ததாரராக பதிவு செய்த பின்னரே ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதிக்கப்படுவார்கள்.
6. மேற்படி ஒப்பந்தப்புள்ளியில் கலந்துக் கொள்ளும் ஒப்பந்ததாரர் குறைந்த பட்சம் ஐந்தாண்டுகள் அனுபவம் பெற்றவராக இருத்தல் வேண்டும். அதற்கான ஆதாரங்கள் சமர்பிக்கப்பட வேண்டும்.
7. வேலைகள் நடைபெறும் போது உயர் அதிகாரிகள் மற்றும் பொறியாளர்கள் கட்டிட பொருட்கள் தரம் தொடர்பாக சான்று கோரப்படும் போது பெற்று தர ஒப்பந்ததாரர் கட்டுப்பட்டவராவார்.
8. வேலைகள் குறிப்பிட்ட காலத்திற்குள் செய்து முடிக்க தவறினால் அவர்களால் செலுத்தப்பட்டிருக்கும் வைப்புத் தொகை (Deposit) பறிமுதல் செய்யப்படுவதுடன் குறிப்பிட்ட வேலைக்கு மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அதனால் ஏற்படும் சகல இழப்புகளையும் சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களிடம் வசூலிக்கப்படும்.
9. ஒப்பந்தப்புள்ளி அளிப்பவர்கள் ஒப்பந்தப்புள்ளிகளுடன் சென்ற ஆண்டு முடிய வருமான வரி செலுத்திய சான்றினை இணைத்தல் வேண்டும்.
10. ஒப்பந்தப்புள்ளிகள் அளிக்கப்படும் போது விற்பனை வரித்துறையில் பதிவு பெற்றுள்ளதற்கான சான்றிதனை இணைக்கப்பட வேண்டும்.
11. ஒப்பந்தப்புள்ளிகள், குறிப்பிட்டுள்ள கால வரையரைக்குள் மட்டும் பெற்றுக் கொள்ளப்படும். அஞ்சல் வழி மூலும் பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளுக்கான கால தாமதத்திற்கு பேரூராட்சி பொறுப்பேற்க இயலாது.
12. ஒப்பந்தப்புள்ளிகள் இப்பேரூராட்சி மன்றத்தின் ஒப்புதலுக்கு பிறகே வேலைக்கான உத்திரவு வழங்கப்படும்.
13. அடித்தல், திருத்தலின்றி முறையாக பூர்த்தி செய்யப்படாத ஒப்பந்தப்புள்ளிகள், பிணை வைப்புத் தொகையின்றி அளிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் நடவடிக்கை ஏதுமின்றி தள்ளுபடி செய்யப்படும்.
14. இப்பேரூராட்சியில் ஏற்கனவே பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்கள் பொறியியல் நடைமுறை நூலில் குறிப்பிட்டுள்ள படிவத்தில் கண்டுள்ள விவரங்கள் முறையாக பூர்த்தி செய்து அசல் செல்வ நிலை சான்றிதழ்களுடன் வண்ண பாஸ்போர்ட் அளவு புகைப்படத்தினை ஒட்டி புதுப்பித்துக் கொள்ள வேண்டும்.
15. வேலைகள் முடிவு பெற்ற பின் இளநிலை பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் அவர்களின் அளவுகள் மேல் அளவுகள் அளவு புத்தகத்தில் பதிவு செய்து மேலொப்பம் வழங்கிய பின்னரே அதற்கான பட்டியல் தொகை வழங்கப்படும்.
16. ஒப்பந்தப்புள்ளி வேலைகளுக்காக செலுத்தப்படும் வைப்புத் தொகை தணிக்கை முடிந்து தணிக்கை அறிக்கையில் தடையேதும் இல்லாத பட்சத்தில் திருப்பி வழங்கப்படும். தணிக்கை தடை ஏற்படுமாயின் தடையில் குறிப்பிட்டுள்ள தொகை தாங்கள் பிற பணிகளுக்காக செலுத்திய வைப்புத் தொகையில் இருந்தும் பிடித்தம் செய்யப்படும்.

17. ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்பட்ட தொகைக்கு 25 சதவீதம் வங்கியில் முதலீடு செய்துள்ளதற்கான ஆதாரம் அல்லது வங்கி அலுவலர் பொறுப்புச் சான்று அளிக்கப்ட வேண்டும்.
18. தார் சாலை பணிகளுக்கு தேவைப்படும் தார் துறை மூலம் வழங்கப்படமாட்டாது. ஒப்பந்ததாரரே பெற்று பணியினை மேற்கொள்ள வேண்டியது.
19. இப்பேரூராட்சியில் பதிவு செய்துள்ள அனைத்து ஒப்பந்ததாரர்களும் தங்களுடைய குடியிருப்பு வீட்டில், மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைத்து அதன் போட்டோ நகல் சமர்பிக்கப்பட வேண்டும். அவ்வாறு சமர்பிக்கப்படாத ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தப்புள்ளியில் கலந்துக் கொள்ள அனுமதிக்க மாட்டார்கள்.
20. இப்பேரூராட்சியில் பதிவு செய்துள்ள அனைத்து ஒப்பந்ததாரர்களும் மாவட்ட செய்தி மலர் காஞ்சிபுரத்திற்கு ரூ.1000/–க்கான வங்கி வரைவோலையாக ஆண்டு சந்தாவாக சமர்பிக்கப்பட வேண்டும்.

செயல் அலுவலர்
செம்பாக்கம் பேரூராட்சி
சென்னை – 73.

பெறுநர்
பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்கள்
செம்பாக்கம் பேரூராட்சி
நகல்

1. பேரூராட்சிகள் உதவி இயக்குநர், காஞ்சிபுரம் மண்டலம் அவர்களின் தகவலுக்காக
2. உதவி செயற்பொறியாளர், காஞ்சிபுரம் மண்டலம்
3. இளநிலை பொறியாளர், செம்பாக்கம் பேரூராட்சி
4. பேரூராட்சி மன்ற தலைவர், துணைத்தலைவர் மற்றும் உறுப்பினர்களின் தகவலுக்காக
5. செம்பாக்கம் பேரூராட்சியின் விளம்பர பலகையில் விளம்பரம் செய்ய
6. தாம்பரம் தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் அவர்களின் தகவலுக்காக
7. தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் அவர்களின் தகவலுக்காக